## சுருக்கம்

முதலமைச்சர் பொது நிவாரண நிதி – சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக கட்டுப்பாட்டில் இயங்கும் வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மையத்தில் வைக்கப்பட்டிருந்த அமிலத்தை (Acid) மூன்று வயது குழந்தை சி. வர்னேஷ் தவறுதலாக குடித்ததினால் அவருடைய மருத்துவ செலவிற்காக இழப்பீட்டுத் தொகையாக ₹ 5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–7(2) துறை

அரசாணை (ப) எண்.42 நாள். 24.02.2017

திருவள்ளுவராண்டு 2048

துன்முகி, மாசி 12

படிக்கப்பட்டது:

மதுரை மாவட்ட ஆட்சியரின் கடித ந.க. எண்.3657/அ1/2016, நாள் 10.01.2017.

+++++

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மதுரை மாவட்ட ஆட்சியர், மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் வெள்ளையம்பட்டி அங்கன்வாடி மைய பயனாளியான 3–வயது குழந்தை சி. வர்னேஷ், 12.11.2016 அன்று அங்கன்வாடி பணியாளர் (பொறுப்பு) திருமதி. ஆர். கௌசல்யா என்பவர் கழிவறை சுத்தம் செய்வதற்காக கலர் பாட்டிலில் கொண்டு வந்து மையத்தில் வைத்திருந்த அமிலத்தை, தவறுதலாக குடித்துவிட்டதால் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் 12.11.2016 முதல் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் என்றும், குழந்தையின் பெற்றோர் இருவரும் விவசாய கூலியாக பணிபுரிந்தும், தற்போது வாடகை வீட்டில் வாடகை ₹ 500–இல் வசித்து வருகின்றனர் இவர்களது ஆண்டு வருமானம் ₹ 48,000 எனவும், பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு, செல்வி.சுபஸ்ரீ (வயது 11/2016) என்ற சகோதரி உள்ளதாகவும், குழந்தை வர்னேஷின் பெற்றோர் மிகவும் வறிய நிலையில் உள்ளனர் என விசாரணையில் தெரிய வருவதால், மேல்சிகிச்சை மேற்கொள்ள இழப்பீட்டுத் தொகையாக ₹ 5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

2. மதுரை மாவட்ட ஆட்சியரது கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து குழந்தை சி. வர்னேஷின் குடும்பத்திற்கு மனிதாபிமான அடிப்படையில் "இந்நிகழ்விற்காக அரசின் வேறு எந்த திட்டத்தின் கீழும் நிதியுதவி எதுவும் பெற்றிருத்தல் கூடாது" என்ற நிபந்தனையுடன்,

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ₹5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மேலே பத்தி–2ல் ஒப்பளிக்கப்பட்ட ₹5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)ற்கான காசோலையை, மதுரை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கும்படி அரசு துணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை காசோலையாகவோ அல்லது அஞ்சலக சேமிப்பு வங்கி கணக்கு மூலமாகவோ அங்கன்வாடி மைய பயனாளி குழந்தை சி. வர்னேஷின் குடும்பத்தினருக்கு வழங்கி, அவர்களிடமிருந்து வரிவில்லையிட்ட பற்றுச்சீட்டைப் பெற்று நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறும் மேலும், இது குறித்து அரசின் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறைக்கு தெரியப்படுத்தும்படியும் மதுரை மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.9784/Fin/CMPRF/2017, நாள் 24.02.2017 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

அரசு துணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்,
நிதி (மு.பொ.நி.நி) துறை, சென்னை – 600 009 (3 படிகள்)
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம்,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009
மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009
இருப்பிட கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை –600 009

நகல்

நிதி (சந) (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி) துறை, சென்னை –600 009
இருப்பிட கணக்கு அலுவலர், (சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–2) துறையின் வழியாக)
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சந–2) த்துறை, சென்னை –600 009
இருப்பு கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்